| STC No. 681/2018 | PW1: திரு. ரமேஷ் | 18.03.2026 |
|---|---|---|

<u>எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317/ 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)</u>

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**
**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் டிராவல்ஸ் வைத்துள்ளேன். நான் இந்நீதிமன்றத்தில் வேறு காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்தேன். அவை முடிந்து விட்டன. எனது டிராவல்ஸ் ஏஜென்சியின் விவரங்களை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. டிராவலஸ் ஏஜென்சியின் மூலம் வருமானம் வருவதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. எதிரிக்கு மூன்று இலட்சம் ரூபாய் பணம் கொடுத்துள்ளேனா என்றால் இரண்டரை லட்சம் ரூபாய் பணம் கொடுத்துள்ளேன். நான் எவ்வளவு நகைகளை அடமானம் வைத்தேன், எந்த வாகனத்தை விற்று எதிரிக்கு பணம் கொடுத்தேன் போன்ற விவரங்களை புகாரில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நகைகள் அடமானம் வைத்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. எதிரியின் கணவர் பெயர் என்னவென்றால் பிரசாந்த் ஆகும். பணத்தை எங்கு வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது எனது குடும்ப

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.18 18:43:07 +0530

உறுப்பினர்கள் வீட்டில் இருந்தனர். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை யார் கையொப்பம் செய்த பெற்றார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அது பற்றி நான் புகாரில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

4. நான் 3 மாதங்களுக்கு முன்பு எதிரிக்கு போன் செய்து எதிரி திருமுருகன் நிதி நிறுவனத்திடம் பணம் வாங்கியதாகவும், அவர்கள்தான் என் மூலமாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர் என்று பேசினேன் என்றால் இல்லை. எதிரி காசோலையை முன் தேதியிட்டு எனக்கு கொடுத்தார் என்றால் 01.03.2018 எதிரி என்னிடம் கடன் வாங்கினார். அன்றைய தினமே எனக்கு காசோலையை கொடுத்தார். காசோலையில் 02.05.2018 என தேதியிட்டு கொடுத்தார்.

5. நான் பிணையமாக காசோலை பெற்றேன் என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும், எதிரி வேறு ஒருவரிடம் வாங்கிய பணத்திற்கு பிணையமாக கொடுத்த காசோலையை நான் தவறாக பயன்படுத்தி பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.18 18:43:14 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**